(7) அரசினர் சட்டமுன் வடிவுகள்.

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்டமுன் வடிவு 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.